கோவைமாவட்டம்

தொண்டாமுத்தூர் ஒன்றியம்

மத்வராயபுரம் ஊராட்சி

மத்வராயபுரம் மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.பொ.கிட்டுசாமி

ந.க.எண் : ம.அ.01/2023/2024 நாள் : 04-09-2023

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - கோவை மாவட்டம் - மத்வராயபுரம் ஊராட்சி - க.ச.எண் : 24/2Aல் 1.09 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1. நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர்,கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களது உத்தரவு ந.க.எண்: CBEREGN/TWULU9RZ/2022/TCP நாள் 08-01-2023.

2. இவ்வூராட்சி பலவகை இரசீது எண் : 99701 நாள் 16-08-2023

3. நிலப்பயன் மாற்றத் தொகை செலுத்திய செலான் எண் :2023816010893 நாள் : 16-08-2023

4. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994

****

உத்தரவு :

கோவை மாவட்டம் , தொண்டாமுத்தூர் வட்டாரம், மத்வராயபுரம் ஊராட்சியில் க.ச.எண் 24/2Aல் 1.09 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்திட தொழில்நுட்ப அனுமதி அளித்து பார்வை 1ல் காண் நகர் ஊரமைப்புதுறை இணை இயக்குநர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் உத்தரவிட்டு உள்ளார்கள். இதற்கான மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் அளித்து L.P./CLPA No. 305/2022 என எண்ணியிட்டு இவ்வூராட்சிக்கு வரப்பெற்றது. இதனை இவ்வூராட்சி மன்றம் கவனமாகப் பரிசீலித்து கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு இம்மனைப்பிரிவுக்கு அங்கீகார அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவு இடப்படுகிறது.

கட்டாய நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களது உத்தரவு ந.க.எண்: CBEREGN/TWULU9RZ/2022/TCP நாள் 08-01-2022 ல் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 6 வரையும் அதே உத்திரவில் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்கள் 1 முதல் 5 வரையும் ஆகியவற்றைக் கட்டாயம் மனுதாரரால் பின்பற்றவேண்டும். தவறும் பட்சத்தில் இந்த அனுமதி உத்திரவானது எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக இவ்வூராட்சி மன்றத்தால் இரத்து செய்யப்படும்.

2. மனுதாரர் மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளையும் இனி வருங்காலங்களில் அரசினால் அறிவிக்கப்படும் அனைத்து விதிமுறைகளையும் உள்ளாட்சியினால் தெரிவிக்கப்படும் அனைத்து விதிமுறைகளையும் கட்டாயம் பின்பற்றவேண்டும். தவறும்பட்சத்தில் இந்த அனுமதி உத்திரவானது எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக இவ்வூராட்சி மன்றத்தால் இரத்து செய்யப்படும்.

3. மனுதாரர் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட அனைத்து பொதுச் சாலைகளிலும் நிழல் தரும் மரங்களை கட்டாயம் நட்டு பராமரிப்பு செய்வதுடன் அம்மரங்களை வளர்த்திட தண்ணீர் வசதி ஏற்படுத்திட வேண்டும்.

மேற்கண்ட 1 முதல் 3 கட்டாய நிபந்தனைகளையும் இனிமேல் வருங்காலங்களில் அரசு / உள்ளாட்சி அமைப்பினரால் அறிவிக்கப்படும் அனைத்து உத்தரவுகள்/ அறிவுரைகளையும் மனுதாரர் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் இந்த அனுமதி உத்திரவானது எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக இரத்து செய்யப்படுவதுடன் மனுதாரர் மீது விதிமுறை மீறல் உள்ளிட்ட சட்டரீதியான நடவடிக்கைகள் இவ்வூராட்சியால் எடுக்கப்படும் என தெரிவித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
ஊராட்சி மன்றம்
மத்வராயபுரம் ஊராட்சி

இணைப்பு : -

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
L.P./CLPA No. 305/2022 மற்றும் CBEREGN/TWULU9RZ/2022/TCP நாள் 08-01-2022
உத்தரவு பிரதிகள்

பெறுநர் :மனுதாரர்
திரு. R. விஸ்வநாதன்
25, மீனாட்சி நகர் ,
தெலுங்குபாளையம் ,
கோயம்புத்தூர் - 641 039.


நகல் :

1. வட்டாரவளர்ச்சி அலுவலர் (ஊ) அவர்கள் ,
தொண்டாமுத்தூர் வட்டாரம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

2. நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்கள்,
கோயம்புத்தூர் மாவட்டம்

3. உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம்,
CMDA டவர் - II, முதல் தளம் எண் 1ஏ
காந்தி இர்வின் மேம்பாலம் சாலை
எக்மோர் , சென்னை - 600 008 -அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

4. ஊராட்சி மன்ற அலுவலக கோப்பிற்கு . . . . . .



கோயம்புத்தூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்

மத்வராயபுரம் ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், மத்வராயபுரம் ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவை எண்கள்-24/2 A - யில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

[illegible] TWULU9RZ

[illegible]

மனைப்பிரிவின் பரப்பு : 1.09 ஏக்கர் (அ) 4412.00 ச.மீ

[illegible] 20 மனைகள்

[illegible] 20 மனைகள்

[illegible] 1743.16 ச.மீ

(4412.00 - 1743.16) X 10.0% = 266.88 ச.மீ

[illegible] 266.88 ச.மீ (10.00 %)

[illegible]

TANGEDCO (ம) பொது உபயோகத்திற்கு [illegible]

(4412.00 - 1743.16) X 0.5% = 13.34 ச.மீ

[illegible] 13.34 ச.மீ (0.50%)

TANGEDCO [illegible] 26.70 ச.மீ (1.00 %) [illegible]

பொது உபயோகத்திற்கு [illegible] 27.87 ச.மீ (1.04 %) [illegible]

நிபந்தனைகள்:

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]

ம.வ./கோ.மா எண் : 305/2022

இணை இயக்குநர் (மு.கூ.பொ)
கோயம்புத்தூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்
கோயம்புத்தூர்

மத்வராயபுரம் ஊராட்சி * தொண்டாமுத்தூர் வட்டாரம் * கோவை மாவட்டம்

கோவை மாவட்டம்
தொண்டாமுத்தூர் வட்டாரம்
மத்வராயபுரம் ஊராட்சி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் அது தொடர்புடைய விதிமுறைகளின் படி இந்த மனைப்பிரிவுக்கு அனுமதி அளித்து இவ்வூராட்சியில் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

மனைப்பிரிவு அனுமதி எண் : 01/2023-24 / நாள் : 4.9.2023
அனுமதி உத்தரவு ந.க.எண் : ம.அ.01/2023-24
நாள் : 4.9.2023

[signature] 4/9/23
தலைவர்
ஊராட்சி மன்றம்
மத்வராயபுரம்.

[signature] 4/9/23